பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாசி 03 புதன்கிழமை 20.09.2023 கதிர் 313

# சனல் -4 காணொலியின் விளைவு செப். 21, 22 சபையில் விவாதம்

**கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் -4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட காணொலி தொடர்பில் எதிர்வரும் வியாழன் (21),வெள்ளிக்கிழமைகளில்(22)நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சித்தலைவர்கள்கூட்டத்தில்இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையில் குறித்த தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக பாதுகாப்பு பிரிவினர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நீண்ட தெளிவுபடுத்தலொன்றை செய்தனர்.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்றையதினம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில், பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவின் பிரதானி இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தினார். ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

## இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் நியூயார்க் நகரில் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் சீனா - இந்தியா - மேற்குலக நாடுகள் இடையிலான உறவுகள் விடயத்தில் கொழும்பின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளது. இந்த விடயத்தில் இலங்கை சீனா பக்கமோ இந்தியா பக்கமோ அணி சேராது என்று அவர் தெரிவித்திருக்கிறார். அதே நேரத்தில் அம்பாந்தோட்டை ஒரு வர்த்தகத் துறைமுகம் அதனை சீனாவின் படைத்துறை துறைமுகம்போன்று சித்தரிப்பதை நிறுத்தவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார். மேற்குல ஊடகங்கள் பொதுவாக அம்பாந்தோட்டை சீனாவின் இராணுவ முக்கியத்துவம் மிக்க இடம் என்று கருத்துத் ☞2

## நாடாளுமன்றத்தில் வெடித்த சர்ச்சை

உயிர்த்த ஞாயிறு தொடர்பான விசாரணைஅறிக்கையின்இரண்டாவது பாகத்தின் முக்கிய பகுதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சமர்ப்பிக்காமை சம்பந்தமாக எதிர்க்கட்சித்தலைவருக்கும்ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும்இடையேசபையில் சர்ச்சைகள் எழுந்தன.

நாடாளுமன்றம் நேற்றைய தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் ☞2

## யானைக்கு தலையில் அடிப்பது போன்று ஏமாற்று யுகத்துக்கு முடிவு கட்டுவோம்

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் என்கிறார் அனுர குமார**

யானையில் தலையில் அடித்து அதனைக் கட்டுப்ப டுத்துவது போன்று ஏமாற்றும் யுகத்தினை அடுத்த வருடம் நடத்தப்படும் ஜனாதிபதி தேர்தலுடன் முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்றுநடைபெற்றமக்கள் சந்திப்பில் உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

கிராமத்தில் உள்ளவர்கள் சாதாரணமானவர்கள். அவர்களை இலகுவாக ஏமாற்றி விடலாம் என்பது தான் ஆட்சியாளர்களின் திட்டமாகஉள்ளது. தற்போதும் அவர்கள்அவ்வாறு ☞2

## யாருக்கும் தெரியாது பெருந் தொகை எம்.பிக்களுக்கு இழப்பீட்டுப் பணம்

**இரு தரப்பு 'டீலை' போட்டுடைக்கிறார் ஹர்சன**

அரகலய போராட்டத்தின்போதுதாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், சொத்துக்களுக்கான இழப்பீடாக, யாருக்கும் தெரியாது பெருந் தொகைப் பணம் வழங் கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தப் பணம் இல்லை என்று கூறும் ஆட்சியாளர்களிடம் இதற்கு மட்டும் பணம் உண்டு. இதுதான் ரணிலுக்கும் பெரமுனவினருக்கும் இடையிலானஒப்பந்தம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றஉறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் ☞2

**மயானத்தில் காணாமற்போன**

## சிறுமியின் சடலத்துக்கு ரூ. 20 லட்சம் சன்மானம்

**பேர்த்தியார் அறிவிப்பு**



வவுனியாவில் மயானத்தில் புதைக்கப்பட்ட பின்னர் தோண்டி எடுக்கப்பட்டுக்காணாமல் போன 2 வயதுச் சிறுமி லிங்கராசா தீபிகாவின் சடலத்தைமீளஒப்படைப்போருக்கு 20 இலட்சம் சன்மானம்வழங்கப்படும் என்று பேர்த்தியார் அறிவித்துள்ளார்.

வவுனியாமாவட்டம் நெலுக்குளத்தைச் சேர்ந்தவர் ☞2

**நாடாளுமன்றத்தில் காலையில்**

## கேள்வி நேர வரையறையை இறுக்கிப் பிடிக்கத் தீர்மானம்

வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு மணி நேரம் திட்டவட்டமானது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் சபாநாயகர் அறிவிப்பை விடுத்த அவர் ☞2

## உத்திகவின் பாதுகாப்பை அதிகரிக்க எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

நாடாளுமன்றஉறுப்பினர் உத்திக பிரேமரத்னவுக்கு பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமாச, அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் உரை ☞8

## சாவகச்சேரி வர்த்தக நிலையங்களின் உரிமை மாற்றத்தை நிறுத்திய ஆளுநர்

**பிரதேச சபையின் விதி மீறல்களை அடுத்து**

(ந.லோகதயாளன்.)

சாவகச்சேரி நகர சபையின் கீழ் இருந்த வர்த்தக நிலையங்களில் சட்டத்துக்குப் பறும்பாக, மேற்கொள்ளப்பட்ட உரிமை மாற்றங்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

சாவகச்சேரி நகர சபைக்கு உரித்தான 31 கடைகள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரதோ அல்லது மாகாண ஆளுநரதோ அனுமதி இன்றி உரிய விதிமுறைகளைப் பின்பற்றாது உரிமை மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள் ☞2

## உலர் வலய விவசாயம் தொடர்பான சர்வதேச மாநாடு கிளிநொச்சியில்

**அறிவியல் நகரில் இன்று நடக்கிறது**

(ந.லோகதயாளன்.)

உலர் வலயத்துக்கான விவசாயம்சம்பந்தமான சர்வதேச மாநாடு யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் இன்று கிளிநொச்சியில் தொடங்குகின்றது.

யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்சிறிசற்குணராசா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இந்த மாநாட்டில் சிறப்புரைகளை ஜப்பானிய பேராசிரியர் உசாமி மற்றும் இலங்கை விவசாயப் பணிப்பாளர் நாயகம் மாலதி பரசுராமன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில் இளம் விஞ்ஞா ☞2

## அரசியல் முறைமை மாற்றமே அவசியம் துப்பாக்கி சூடுகளை தடுக்க அதுவே வழி

**பாதிக்கப்பட்ட எம்.பி. உத்திக பிரேமரத்தன நேற்று சிறப்புரை**

அரசியல்முறைமையில்மாற்றத்தைஏற்படுத்தாதவரை தன் மீது நடத்தப்பட்டதுப்பாக்கிச்சூடு போன்றசம்பவங்களை தடுக்க முடியாதென நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தெரிவித்தார்.

தன்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியவாறு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தனது உரையில் தெரிவித்ததாவது:

என் மீது செப். 17 இரவு மர்மநபர்கள் சிலரால் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். இந்தச் சம்பவத்தை யார் செய்தார்கள் என்பதை விட, தற்போதுள்ள அரசியல் முறைமையினால்தான் தாக்குதல் நடத்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன், இந்த முறைமை தவறு என்றுநாம்அனைவரும் அறிவோம்,

இந்த முறைமை தவறு என்பது நம் நாட்டு மக்களுக்கும் தெரியும். அத்துடன் நமது நாட்டின் சமூகஅமைப்பும்தவறாக உள்ளது. அரசியலும் தவறாக உள்ளது அதனால்தான் ☞2

## தியாகி திலீபனின் நினைவேந்தலை தடுத்து நிறுத்தப் பொலிஸார் முயற்சி

**நீதிமன்றத்தில் இன்று வழக்கு விசாரணை**

தியாகி திலீபனின் நினைவேந்தல்ஊர்வலத்தைத்தடுத்துநிறுத்துவதுாதொடர்பானமனுஒன்றை யாழ்ப்பாணப்பொலிஸார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். அதன் மீது இன்று விசாரணை இடம்பெறவுள்ளது.

திலீபனின் நினைவு ஊர்தி மீது திருகோணமலையில் சிங்களவர்கள் சிலர் தாக்குதல் நடத்தியிருந்தனர். ஊர்திப் பவனியில் வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனையும் அவர்கள் தாக்கியிருந்தனர். இந்த நிலையில் கொழும்பில் நடத்தப்பட இருந்ததியாகிதிலீபனின் நினைவுநிகழ்வுகளுக்கு கொழும்பு நீதிவான் மன்றம்நேற்றுத்தடைவிதித்து உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலை ☞2

காலைக்கதிர் Kalaikkathir

### இனி இது .....

தெரிவித்து வருகின்றன. அங்கு சீனா இராணுவத் தளத்தை நிறுவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்றும் கூறி வருகின்றன. இந்தப் பின்னணியிலேயே ரணில் அம்பாந்தோட்டை ஒரு வர்த்தகத் துறைமுகம் என்கிறார்.

சீனாவுக்கு எதிராக அமெரிக்கா - ஜப்பான் - ஆஸ்திரேலியா ஆகியன கூட்டுச் சேர்ந்திருப்பதையும் இதனால் இந்தோ பசுபிக் என்கிற கொள்கை உருவாகுவதையும்கூட அவர் விமர்சித்திருக்கிறார். ஆக மொத்தத்தில் சீனா - அமெரிக்கா - இந்தியா ஆகிய முத்தரப்புக்களுக்கு இடையில் இலங்கை எப்படி நடந்துகொள்ளப் போகிறது என்று அவர் கோடி காட்டியிருக்கிறார். அதாவத ராஜபக்ஷக்களின் சீனச் சார்பு நிலைப்பாட்டிலிருந்து கொழும்பு அதிகம் விலகி நடக்காது என்பதையே அவரது நியூயோர்க் உரைகளும் கருத்துக்களும் உணர்த்துகின்றன.

இலங்கையில் சீனாவின் அதிகரித்துவரும் பிரசன்னம் தொடர்பில் அமெரிக்கா - ஜப்பான் - இந்தியாவுக்கு அதிகரித்து வரும் கரிசனைகள், கவலைகள் தவறானவை என்று கூறுவதன் மூலம் தனது சீனச் சார்பு நிலைப்பாட்டில் இருந்து கொழும்பு விலகப்போவதில்லை என்று அவர் குறிப்பாலுணர்த்தியிருக்கிறார். அதற்கேற்றாற்போல, அமெரிக்கா - இந்தியா - ஜப்பான் ஆகிய நாடுகளின் கரிசனைகள், கவலைகளுக்கு மத்தியிலும் ஒப்டோபர் மாதத்தில் இலங்கையை வந்தடையவுள்ளது சீனாவின் ஷி யங் -6 கடலாய்வுக் கப்பல். இந்தக் கப்பல் இலங்கையில் நாரா நிறுவனத்துடன் இணைந்து கடல் ஆய்வுகளில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டாலும் அதுவொரு உளவுக் கப்பல் என்றும் கடல் படுக்கையை அது தன்பாட்டில் வரைபடப்படுத்தும் சக்தியைக் கொண்டது என்றும் மேற்குலக ஊடகங்கள் கூறுகின்றன.

அமெரிக்கா - இந்தியா - ஜப்பானி ஆகிய நாடுகளின் கருத்துக்கள், கவலைகளைப் புறந்தள்ளி ஷி யங் -6 கப்பல் இலங்கைக்கு வருவது மட்டுமல்ல அதைத்தொடர்ந்து யாங்கொங் -3 என்கிற சீனக் கப்பலும் அடுத்த ஜனவரி மாதத்தில் இலங்கைக்கு வரவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கொழும்பு அணிசேராக் கொள்கை என்கிற பெயரில் சீனாபக்கமான அதிக சாய்வைக் கொண்டே தனது அயலுறுவுக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லப் போகின்றது என்பது தெளிவாகின்றது.

இதன் எதிர்வினைகள் நாட்டுக்குச் சாதகமாக இருக்குமா பாதகமாக இருக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

### யாருக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரகலய காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளமைக்காக 714 மில்லியன் ரூபா இதுவரையில் இழப்பீடாக 32 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்தத் தொகையானது 1414 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக சிங்கள நாளேடான 'அத' பத்திரிகை அறிக்கையிட்டுள்ளது. இதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டு நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்த நாடு வங்குரோத்தாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்துவதற்கு இந்த நாட்டில் பணமில்லை என்ற நிலைமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் எரியூட்டப்பட்ட நாடாளுமன்ற ஊறுப்பினர்களின் வீடுகளுக்கான இழிப்பீடுவழங்குவதற்கு நிதி இருக்கிறது.. இந்த நிதி ஒதுக்கீடு யாருக்கும் தெரியாது வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது ஜன பெரமுனவின் 134 உறுப்பினர்களுக்கும் நிதி உதவி செய்கின்றார். அவர் நிதி உதவி வழங்குவதால் அவரை அதிகாரத்தில் வைத்திருப்பதற்கு பொது ஜெனபெரமுனவினர் ஆதரவளிக்கின்றனர். இது தான் இருதரப்பினது பரஸ்பர ஒத்துழைப்பாக உள்ளது - என்றார்.

### சாவகச்சேரி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இது தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து அந்த நடவடிக்கையை உடனடியாகத் தடத்து நிறுத்த அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கடைகளின் உரிமை மாற்றத்தின்போது சபைக்குச்செலுத்தவேண்டிய முற்பணத்தைக் குறைத்து வாங்கியதனால் சபைக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட இழப்பு ஏற்பட்டதாகவும் முறையிடப்பட்டது.

உள்ளூராட்சி சபைகள் சட்டத்திற்குப் புறம்பாக ஒரு உரிமையாளருக்கே இரண்டு, மூன்று கடைகள் எல்லாம் வழங்கப்பட்டுள்ளன. ஓர் அரச உத்தியோகத்தருக்கும் இவ்வாறு கடை உரிமம் மாற்றப்பட்டுள்ளது. இவை அனைத்தும் வடக்குமாகாண ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதனை ஆராய்ந்த ஆளுநர் சாவகச்சேரி நகரசபை மேற்கொண்ட உரிமை மாற்றம் அனைத்தையும் உடன் இரத்துச் செய்யுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிற்கு பணித்துள்ளார்.

### சிறுமியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கராசா. அவரது மகளான 2 வயது தீபிகா விளையாடிக்கொண்டிருந்த போது தண்ணீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து மூச்சுத் திணறி உயிரிழந் தார். ஓகஸ்ட் 26 இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. விசாரணைகளின் பின்னர் குழந்தையின் சடலம் இராசேந்திரங்குளம் மயானத்தில் புதைக்கப்பட்டது.

இரண்டு வாரங்களின் பின்னர் குழந்தையின் சடலம் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதுகுறித்து செப்டெம்பர் 8 நெலுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.

விசாரணைகள் தொடர்ந்தாலும் சடலம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த நிலையில் காணாமற்போன சிறுமியின் சடலத்தைத் தம்மிடம் ஒப்படைத்தால் 20 இலட்சம் சன்மானம் வழங்கப்படும் என சிறுமியின் பேர்த்தியாரான குணரட்னம் ரோகினி அறிவித்துள்ளார்.

வவுனியாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறுமியின் சடலத்தை எடுத்துச் சென்றவர்கள் குறித்துத் தகவல் தந்தால் 10 லட்சம் ரூபாய் சன்மானமும், சடலத்தை ஒப்படைத்தால் 20 லட்சம் ரூபாய் சன்மானமும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

உண்மையான தகவல் தெரிந்தவர்கள் தனது 0766091158 அல்லது 0754986953 தொலைபேசி இலக்கத்திற்குத் தெரியப்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

(100)

### யானைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் சிந்திக்கின்றார்கள்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதும் சிறுவர்களுக்கு விளையாட்டுப் பொருட்களை வழங்குகின்றார்கள். இளைஞர், யுவதிகளுக்கு சங்கீதக் கச்சேரிகளை நடத்தி மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றார்கள். மூப்படைந்த பெண்களை கவருவதற்காக மஹிந்தவின் புகைப்படத்துடன் சுவரொட்டிகளை அச்சிடுகின்றார்கள்.

அநுராதபுரத்தில் அது நடைபெற்றுள்ளது. கடந்த தேர்தலில் எஸ்.எம்.சந்திரசேன தனது புகைப்படத்தினையும் விடவும் மஹிந்தவின் புகைப்படத்தினை பெரிதாக அச்சிட்டு கிராமங்களின் அனைத்துப் பகுதிகளிலும் ஒட்டினார்.

மூப்படைந்த ஆண்களை கவருவதற்காக காற்போத்தல் சாராயத்தினை வழங்குகின்றார்கள். இவ்வாறு தொடர்ச்சியாக ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதனால் எந்தவிதமான நன்மைகளையும் கிராமத்து மக்கள் அனுபவிக்கவில்லை. ஆகவே எதிர்வரும் காலத்திலும் அவ்விதமான நிலைமைகளுக்கு இடமளிக்க முடியாது.

எதிர்வரும் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நவம்பர் மாதம் நடத்தப்பட்டே ஆகவேண்டும். ஜனாதிபதி தேர்தலில் இந்த ஏமாற்றும் செயற்பாட்டு யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

அந்த முற்றுப்புள்ளியானது யானையில் தலையில் அடிப்பதைப்போன்றதாகும். அதன் பின்னர் ஏமாற்றும் செயற்பாடு ஒன்றே முன்னெடுக்கக் கூடாது - என்றார்.

### உலர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னிகள் மற்றும் பல்கலைக் கழக சமூகத்தினரால் உருவாக்கப்பட்ட விவசாயம் சார்பான தொழில்நுட்ப அறிவு முன்வைக்கப்படும். இந்திய மற்றும் ஜப்பானிய விஞ்ஞானிகளும் ஏனைய பல்கலைக்கழக சமூகத்துடன் துறைசார் அதிகாரிகள், விவசாய சம்மேளன பிரதிநிதிகள், ரோட்டரி கழகம் மற்றும் தனியார் நிறுவன பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

கிளிநொச்சி அறிவியல்நகரில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக விவசாயபீடத்தில் ஒரு நாள் நிகழ்வாக இன்று காலை 9 மணிக்குத் தொடங்கி மாலை 4.00 மணிக்கு மாநாடு முடிவடையவுள்ளது.

### கேள்வி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ள ஒரு மணி நேரத்தை கடந்து ஒவ்வொரு நாளும் நேரம் எடுத்துக்கொள்ளப்படுவதால் பொது அலுவல்களுக்கு ஏற்படும் தடைகள் மற்றும் அதன்மூலம் விவாதத்துக்கான காலம் குறைவது தொடர்பில் 2023.09.01 மற்றும் 2023.09.08 ஆம் திகதிகளில் இடம்பெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய, வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை திட்டவட்டமாக மு.ப. 10.30க்கு நிறைவு செய்வதற்கும், அதுவரையான நேரத்தில் கேட்க முடியாத வினாக்கள் இருந்தால், அவற்றை அடுத்து பட்டியலிடக்கூடிய அண்மித்த தினமொன்றில் கேட்பதற்கு இயலுமான வகையில் மீண்டும் ஒழுங்குப்பத்திரத்தில் சேர்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், வினாக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில், வேறேதும் விசேட விடயமொன்று தொடர்பில் குறிப்பிடுவதற்கு ஏதாவதொரு உறுப்பினர் கருதினால், நிலையியற் கட்டளைகளுக்கு அமைய செயற்படுமாறும், அது தொடர்பில் தேவைக்கமைய தனது முன்னனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு இன்று இந்த நிலைக்கு வந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்களை தடுப்பதாக இருந்தால் எமது முறைமையை மாற்றவேண்டும். முறை மாற்றம் ஏற்படுத்தாமல் ஒருபோதும் இவ்வாறான சம்பவங்களை தடுக்க முடியாது - என்றார்.

### திலீபனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் செப். 18 யாழ்ப்பாணத்திலும் தியாகி திலீபனின் நினைவேந்தல் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்துமாறு கோரும் மனுவைப் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். அதன் மீது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் வாதங்களை இன்று முன்வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### உத்திகவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தொடர்ந்து உரையாற்றும்போதே அவர் இதனை வலியுறுத்தினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபர்களை விரைவில் சட்டத்தின் முன்நிறுத்துவதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஆளும் தரப்பின் பொறுப்பாகும். அத்துடன் சக நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவரின் பாதுகாப்பை உறுதி செய்வது எம் அனைவரினது பொறுப்புமாகும். சம்பந்தப்பட்ட உறுப்பினரின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும். தாக்குதல் குறித்து விரைந்து விசாரணை நடத்தி சந்தேகநபர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும் - என்றார்.

### நாடாளுமன்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடியபோது, நிலையியற் கட்டளையின் பிரகாரம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதாச ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பியவாறு எழுந்தார்.

அவர், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் உயிர்த்த ஞாயிறு சம்பந்தமான விவாதம் நடைபெற உள்ளது. ஆனால் தற்போது வரையில் அந்த சம்பவம் சம்பந்தமாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கையின் இரண்டாம் பாகத்தின் முக்கிய பகுதிகள் எமக்கு வழங்கப்படவில்லை.

முக்கிய சில பகுதிகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகள் அடங்கலான அந்த முழுமையான அறிக்கை நாடாளுமன்ற நூலகத்தில் இருப்பதாகவும் அதனை நாடாளுமன்ற செயலாளரின் அனுமதியுடன் அங்கு சென்று பார்க்குமாறும் அதில் விடயங்களை பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் பிரதிநிதியான நான் நாடாளுமன்ற செயலாளரின் அனுமதியைப் பெற்ற பின்னரா ஒரு விசாரணை அறிக்கையைப் பார்வையிடவேண்டும் என்று இந்த இடத்தில் கேள்வி எழுப்புகிறேன்.

இத்தனை நாட்களாக அந்த அறிக்கையின் சில பகுதிகளை மறைத்து வைப்பது நோக்கம் என்ன? என்பதை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன் இங்கு ஆட்சியில் இருப்பவர்கள் குருதி தோய்ந்த அந்தச் சம்பவத்தில் தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதனால்தான் அந்த அறிக்கையை பகிரங்கப்படுத்த முடியாதுள்ளார்கள் என்பதை நான் பகிரங்கமாக தெரிவிக்கிறேன் - என்றார்.

இதன் போது எழுந்த சுயாதீனக்குழு உறுப்பினரான நிமல் லன்ஷா, குறித்த அறிக்கையில் உள்ள விடயங்களை யாரும் சென்று பார்வையிடலாம் அதற்கு எந்தத் தடையும் இல்லை. இது நீண்ட நாட்களின் முன்பே அங்கு வைக்கப்பட்டுவிட்டது. இருப்பினும் அதனை விவாத்துக்கு முன்னதாக அனைவருக்கும் பெற்றுக் கொடுக்குமாறு நான் பரிந்துரைக்கிறேன் - என்றார்.

இதனை அடுத்து எழுந்த ஆளும் கட்சியினுடைய பிரதம கொரட்ஜ் அமைச்சர் பிரன்ன ரணதுங்க, விசாரணை அறிக்கையானது எப்போதே நூலகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டது. அவை தனித்தனியாக பாகம்-1 பாகம்-2 என்ற அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளன. அதனை தேவையானவர்கள் சென்று அதில் இருக்கின்ற உள்ளடக்கங்களை சேகரித்துக் கொள்ளலாம். அதில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை இவை அனைத்தும் பாதுகாப்பு தரப்பின் அறிவுறுத்தலுக்கு அமையவே நடைபெற்றுள்ளது. ஆனால் எதிர்க்கட்சி தலைவர் இப்போது விவாதம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்தான் குறித்த அறிக்கையின் பிரதிகள் பற்றி பேசுகின்றார் - என்றார்.

இதனை தொடர்ந்து எழுந்த மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினராக எஸ்.பி.திசநாயக்க, பிரேமதாசவுக்கு எதிராக அதாவது உங்களுடைய தந்தையாருக்கு எதிராக நம்பிக்கையில்லாத பிரேரணை கொண்டுவரப்பட்ட போது அதனுடைய பிரதியை நாம் கோரினோம். ஆனால் அவர் வழங்க மறுத்திருந்தார். இதனை அவரின் புதல்வர் என்பதால் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் - என்றார்.

இதனைத்தொடர்ந்து பதில் அளிக்க சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பாதுகாப்புத் தரப்பினருடைய அறிவுறுத்தலுக்கு அமையவே நாம் இரண்டாவது பாகத்தின் அறிக்கையை நூலகத்தில் வைத்துள்ளோம். அதனை தேவையானவர்கள் சென்று பார்வையிடலாம் அதற்கு எந்தவிதமான தடைகளும் இல்லை - என்றார்.

### வங்குரோத்து, துப்பாக்கிச் சூடு என்றிருந்தால்

# முதலீட்டார்கள் ஒருபோதும் நாட்டுக்கு வரமாட்டார்கள்

## தயாசிறி காட்டம்

இலங்கை மத்திய வங்கி வங்குரோத்தாகியுள்ள நிலையில், வீதிகளில் துப்பாக்கிச்சூடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் முதலீட்டாளர்கள் ஒருபோதும் நாட்டுக்கு வரமாட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைச் சுட்டிக்காட்டினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வர வேண்டுமாயின் நாட்டின் அமைதியும் சகவாழ்வு இருக்கவேண்டும். ஆனால் தற்போது இலங்கையில், அமெரிக்காவின் சிக்காகோவில் வீதியில் மனிதர்களை சுட்டுக்கொல்லும் நிலைமை போல் ஏற்பட்டுள்ளது. வீதி நெடுகிலும் ஐஸ் போதைப் பொருள் விற்பனை செய்யும் நிலைமையேற்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ள மிகப் பெரிய போதைப் பொருள் கடத்தல்காரர்கள், இலங்கையில் கொலை செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியலை அனுப்பி, கொலைகளைச் செய்கின்றனர்.

இலங்கை மத்திய வங்கி கொத்தலாவவின் கோல்டன் கீ நிறுவனம் போல் மாறியுள்ளது. அதாவது வங்கோரத்து அடைந்துள்ளது.

ஒருபுறம் வங்குரோத்து அடைந்து கடனை செலுத்த முடியாத நாடாக இலங்கை மாறியுள்ளதுடன் அமைதியும் சகவாழ்வும் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் முதலீட்டாளர்களை நாட்டுக்குள் அழைத்தால் அவர்கள் எந்த நம்பிக்கையுடன் வருகை தருவார்கள்? - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் பிரச்சினைக்கான தீர்வை உடன் வழங்க ஜனாதிபதி ரணிலுக்கு அழுத்தம் பிரயோகிக்குக

## அமெரிக்க உயர்மட்டப் பிரதிநிதிகளிடம் சுமந்திரன் வலியுறுத்தல்



நியூயோர்க்குக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வை உடனடியாக வழங்குவதற்கு அழுத்தம் பிரயோகிக்குமாறு அமெரிக்க உயர்மட்டப் பிரதிநிதிகளிடம் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அது மாத்திரமன்றி நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ள 78 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் பங்கேற்கவுள்ள நிலையில், அவருடனான சந்திப்பின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அழுத்தம் பிரயோகிக்குமாறும் சுமந்திரன் அவர்களிடம் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடருக்கு முன்பதாக உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்காக ஜெனீவா சென்றிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அதனைத்தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் முக்கிய உயர்மட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டுவருகின்றார்.

அதன்படி கடந்த வியாழக்கிழமை வரை வொஷிங்டனில் தங்கியிருந்த அவர், அங்கு தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக், அமெரிக்கத் திறைசேரி அதிகாரிகள், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அதிகாரிகள், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள், செனெட் சபையின் வெளியுறவுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.

குறிப்பாக தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் ஆகியோருடனான சந்திப்புக்களின்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. பேரவை அமர்வில் இலங்கை தொடர்பில் தனியாகவும், இணையனுசரணை நாடுகளுடன் இணைந்து கூட்டாகவும் அமெரிக்கா வெளியிட்ட அறிக்கைகள் தொடர்பில் பேசப்பட்டது. அதுமாத்திரமன்றி ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் பொறுப்புக்கூறல் செயற்திட்டம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்தும், அதனூடாக அடுத்தகட்டமாக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்தச் சந்திப்புக்களின்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் இவ்வாண்டு கொண்டாடப்பட்ட 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்திருந்த போதிலும், இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை என்று அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகளிடம் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி, நியூயோர்க்கில் ஆரம்பமாகியுள்ள 78 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் பங்கேற்கவுள்ள நிலையில், அவருடனான சந்திப்பின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அழுத்தம் பிரயோகிக்குமாறும் சுமந்திரன் அவர்களிடம் வலியுறுத்தினார்.

அதேபோன்று நல்லிணக்கம் குறித்து அரசாங்கம் தொடர்ச்சியாகப் பேசினாலும், அதற்கு முரணான விதத்திலேயே செயற்பட்டுவருகின்றது என்று சுட்டிக்காட்டிய சுமந்திரன், தமிழ் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகளை நிர்மாணித்தல், இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களைத் தொல்லியல் பகுதியாகப் பிரகடனப்படுத்தல் என்பன உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் பௌத்த சிங்களமயமாக்கல் குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

அத்தோடு முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாயில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழியில் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அங்கு கண்டறியப்படும் மனிதஎச்சங்களை அமெரிக்க ஆய்வுகூடங்களில் ஆய்வுசெய்வதற்கான சாத்தியப்பாடு குறித்து பரிசீலனை செய்யுமாறும் அமெரிக்க உயர்மட்டப் பிரதிநிதிகளிடம் சுமந்திரன் வேண்டுகோள்விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# இலங்கை இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் தென்கொரியாவில் பல வேலை வாய்ப்புகள்

## தென்கொரிய ஜனாதிபதி உறுதி





இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் செயற்திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிப்பதற்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டத்தை தென்கொரிய ஜனாதிபதி பாராட்டியதுடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

மேலும், எதிர்காலத்தில் இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு தென்கொரியாவில் பல புதிய தொழில்வாய்ப்புகள் உருவாக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், காலநிலை மாற்றத்தைக் குறைப்பது தொடர்பான ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையில் விரைவில் கைச்சாத்திட எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு திங்கட்கிழமை நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான தென் கொரிய நிரந்தர வதிவிட தூதுக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தென்கொரிய ஜனாதியால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டதோடு, சிநேகபூர்வ கலந்துரையாடலின் பின்னர் இரு தலைவர்களுக்குமிடையில் உத்தியோகபூர்வ கலந்துரையாடலும் இடம்பெற்றது.

1978 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தென்கொரியாவுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற இணக்கப்பாட்டுடன், தொடர்பாடல்களை விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பில் தலைவர்கள் நீண்ட கலந்துரையாலில் ஈடுபட்டனர்.

இலங்கை மற்றும் தென்கொரியாவுக்கு இடையில் வர்த்தக மற்றும் முதலீட்டு தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இரு தலைவர்களும் விசேட அவதானம் செலுத்தியிருந்ததோடு, விரைவில் இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தக ஒப்பந்தத்தை கைசாத்திட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.


தற்போதும் இலங்கையின் இளைஞர், யுவதிகள் பெருமளவில் தென்கொரியாவில் தொழில் புரிகின்றனர் என்பதோடு அந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றமைக்காக தென்கொரிய ஜனாதிபதி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்தார்.

அதேபோல் தென்கொரிய சேவைக் காலத்தின் பின்னர் தொழில்திறன் மிக்கவர்களாகவே அவர்கள் இலங்கை திரும்புவதாகவும், அதனால் அவர்களால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு உயர் பங்களிப்பு கிடைக்கும் எனவும் வலியுறுத்தினார்.

இதன்போது காலநிலை மாற்றங்களை மட்டுப்படுத்திக் கொள்வது தொடர்பில் இலங்கை ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டதோடு, இருநாடுகளுக்கும் இடையிலான காலநிலை மாற்றம் குறித்த ஒப்பந்தத்தை விரைவில் கைச்சாத்திட எதிர்பார்த்திருப்பதாகவும், காலநிலை மாற்றங்களுக்கு முகம்கொடுப்பது தொடர்பில் இலங்கையுடன் நெருக்கமாக செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யெயோல் சுட்டிக்காட்டினார்.

அதேபோல் இலங்கையின் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விளக்கமளித்திருந்த அதேநேரம், டிஜிற்றல் மயமாக்கலில் ஆச்சர்யமாக விளங்கும் தென்கொரியாவை முன்னுதாரணமாக கொள்ள முடியும் என தென்கொரிய ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். விரைவில் தென் கொரியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் தென்கொரிய ஜனாதிபதி ஜூன் சுக் யெயோல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்தார். (05)

# வெகுவிரைவில் இலங்கைக்கு வருகை தருவார் சமந்தா பவர்



சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (யுஎஸ்எயிட்) தலைமை அதிகாரி சமந்தா பவர் வெகுவிரைவில் இலங்கைக்கு வருகைதரவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

அமெரிக்க இராஜதந்திரியான சமந்த பவர், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன்னர் 2013 - 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் 28 ஆவது தூதுவராகக் கடமையாற்றினார்.

அமெரிக்காவின் ஆளுமைமிக்க இராஜதந்திரிகளில் ஒருவராக நோக்கப்படுபவரும், கடந்த 2016 ஆம் ஆண்டு/போர்ப்ஸ் இதழால் வெளியிடப்பட்ட உலகின் பலம்பொருந்திய பெண்களின் பட்டியலில் 41 ஆம் இடத்தில் இருந்தவருமான சமந்த பவர், கடந்த 2021 ஆம் ஆண்டு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை கடந்த ஆண்டு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த நிலையில், நாட்டின் விவசாயிகள் மற்றும் வறிய, பின்தங்கிய சமூகப்பிரிவினருக்கு அவசியமான பல்வேறு உதவிகள் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பால் வழங்கப்பட்டன.

அதன்ஓரங்கமாக உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்திருந்த சமந்தா பவர், உரத்தையும் விவசாய நடவடிக்கைகளுக்கு அவசியமான ஏனைய பொருள்களையும் கொள்வனவு செய்வதற்கு விவசாயிகளுக்கு உதவும் வகையில் 40 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குவதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அறிவித்திருந்தார்.

அதுமாத்திரமன்றி அங்கு கருத்து வெளியிட்ட அவர், 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் இலங்கை தொடர்பில் கண்காணிப்புப்பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டு நீண்டகாலம் கடந்திருக்கின்ற போதிலும், கடந்த காலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் இன்னமும் போதியளவில் பூர்த்திசெய்யப்படவில்லை. நீதியைப் பெற்றுக்கொள்வதும் காணாமல்போனோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதுமே பாதிக்கப்பட்ட தரப்பினரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இன்னமும் தாய்மார் காணாமல்போன தமது பிள்ளையின் புகைப்படத்துடன் போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர். எனவே இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளில் அமெரிக்கா ஓர் துடிப்பான உறுப்பினராக விளங்குவதுடன் மேற்படி கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றது' என்றும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே அவர் மீண்டும் வெகுவிரைவில் இலங்கைக்கு வருகைதரவுள்ளார். அவருடன் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் உதவி நிர்வாக அதிகாரி அஞ்சலி கௌரும் வருகைதருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (05)

# பொலிஸ் நிலையம் குச்சவெளியில் திறப்பு

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தொகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பிரதி பொலிஸ் அதிபர் எம்.ஜீ.குணதிலக, பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பொலிஸ் நிலையத்தைத் திறந்துவைத்தார்.

அத்துடன் இந்நிகழ்வில் சிரேஸ்ட பொலிஸ் கண்காணிப்பாளர் சமன் சிகேரா, முப்படை தளபதிகள், அரச அதிகாரிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர். 1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பொலிஸ் நிலையம் இதற்கு முன்னர் தொல்பொருள்திணைக்களத்துக்கு உரித்தான இடத்தில் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பெண்கள் வேலைக்குச் செல்லும் சூழலை விரிவாக்குவோம்

வீடுகளில் குழந்தைகள் மற்றும் முதியோர்களைப் பராமரிக்க வேண்டியிருப்பதன் காரணமாக இலங்கைப் பெண்களில் பெரும்பாலானவர்கள் வேலைக்குச் செல்லாது ஒதுங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது என்று கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்று தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

'வீடுகளைக் கவனத்துக்கொள்வது என்கிற சுமையின் பெரும்பங்கைப் பெண்களே சுமக்கிறார்கள்" என்று கொழும்பை தளமாகக் கொண்ட ஒரு சிந்தனைக் குழுவான அட்வகேட்டா இன்ஸ்டிட்யூட் தெரிவித்திருக்கிறது.

'ஆண்களுடன் ஒப்பிடுகையில், பெண்கள் மூன்று மணி நேரம் பன்னிரெண்டு நிமிடங்களை வீட்டு வேலைகளில் அதிகம் செலவிடுகிறார்கள்' அந்த நிறுவனத்தின் ஆய்வு கண்டறிந்துள்ளது.

பெண்களுக்கான ஊதியம் குறைவாக வழங்கப்படுவதும் அவர்கள் வீட்டுப் பராமரிப்பில் அதிகம் ஈடுபடுவதற்கான காரணம் என்கிறது இந்த ஆய்வு. இலங்கையில் பகல்நேர பராமரிப்புக்கான செலவு மாதம் 22,400 முதல் 27,000 ரூபாவாகும் அதேவேளை ஒரு பெண்ணின் சராசரி வருமானம் 25,500 என்கிறது இந்த ஆய்வு நிறுவனம்.

ஊதியம் வழங்கப்படாத வீட்டுப் பராமரிப்புப் பணியின் சமமற்ற பொறுப்புச் சுமை காரணமாக பெண்கள் பணியிடத்திலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றனர் என்பதே அந்த நிறுனத்தின் முடிவு.

'பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 30 முதல் 35 சதவீதத்திற்கு மேல் செல்லாததற்கு இதுவும் ஒரு காரணம்' என்று கொழும்பு முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்க மன்றத்திற்கு தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கையின்படி, சுமார் 62.8 சதவீத பெண்கள் வீட்டுப் பொறுப்புகள் மற்றும் ஊதியம் இல்லாத பராமரிப்பு வேலைகள் காரணமாக பொருளாதார ரீதியாக செயலற்ற நிலையில் உள்ளனர்.

'மேலும், ஆண்களுடன் ஒப்பிடுகையில், பெண்கள் முதியவர்கள் மற்றும் குழந்தைகளை கவனித்துக்கொள்வது போன்ற ஊதியம் இல்லாத பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்காக 54 நிமிடங்களை செலவிடுகிறார்கள்' என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

முதியோர் மற்றும் குழந்தைகள் பராமரிப்புக்கு தக்க பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படாததே பெண்கள் இந்தப் பணிகளில் அதிக நேரத்தைச் செலவிடவேண்டியிருப்பதற்கான காரணம் என்பது வெளிப்படை.

'முதியோர் பராமரிப்பு அரசால் கட்டுப்படுத்தப்படவேண்டும்,' என்று இந்த ஆய்வை முன்னெடுத்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர். முதியோர் பகல் பராமரிப்புமையங்களை அரசு ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் இந்த ஆய்வு வலியுறுத்துகின்றது.

பொருளாதார மீட்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியன குறித்து அக்கறைப்படும் இன்றைய ஆட்சியாளர்கள், பெண்களும் வேலைக்குச் செல்லும் சூழ்நிலையை அதிகரிப்பது மிகவும் முக்கியமானது. ஆண், பெண் இருவரது உழைப்பும் அதிகரிக்கப்படும்போதே குடும்பத்தினதும் நாட்டினதும் பொருளாதார நிலை உயரும். அதற்கு பெண்களின் தலையில் இறக்கப்பட்டுள்ள குழந்தைகள், முதியோர் பராமரிப்புப் பணிச் சுமை தணிக்கப்பட்டு அவர்கள் வேலைக்குச் செல்லும் சூழ்நிலை அதிகரிக்கப்படவேண்டும்.

அது குறித்து ஆட்சியாளர்கள் அக்கறை செலுத்தவேண்டிய தருணம் இது.

## மன்னாரில் வலை உற்பத்தி நிலையம்

# ரசீது உண்டு, ஆனால் ஆலையை காணோம்!

**ந.லோகதயாளன்**





2008 வெளிவந்த கண்ணும் கண்ணும் என்ற திரைப்படத்தில் வைகைப் புயல் வடிவேலுவின் மிகச்சிறந்த நகைச்சுவை ஒன்று இடம்பெற்றிருக்கும். லஞ்சம் ஊழலின் அகோர முகத்தைக் காட்டக்கூடிய அதி உன்னத நகைச்சுவை அது. "கிணத்தக் காணோம்" என்று வடிவேலு செய்யும் அலப்பறையில் தமிழ் உலகே எழுந்து நின்று சிரிக்கும்.

கிணறு வெட்டுவதற்காகக் கொடுத்த 60 ஆயிரம் ரூபா பணத்தில் 45 ஆயிரம் ரூபாவை அதிகாரிகள் லஞ்சமாகவே பிடுங்கிவிட, மீதியிருந்த 15 ஆயிரத்தையும் வடிவேலு தன் பங்குக்குச் செலவழித்துவிடுவார். கிணறு வெட்டப்படவில்லை. திடீரென ஒருநாள் கிணற்றைப் பார்க்க அதிகாரி வரப்போகிறார் என்று கடிதம் வரும். உடனே பறந்தடித்து வடிவேலு அந்த அதிகாரியிடம் போவார். அங்கே அதிகாரியோ, 2 ஆயிரம் ரூபா லஞ்சம் கொடு கிணறு வெட்டப்பட்டது, அதனை நான் எனது கண்களால் பார்த்தேன் என்று எழுதிக் கொடுக்கின்றேன் என்பார். வடிவேலுவும் அப்படியே செய்வார். இன்னும் கொஞ்ச நாள்கள் கழித்து வாங்கிய கடனுக்கு தவணைப் பணம் செலுத்தவில்லை என்று நோட்டீஸ் வரும். விழித்துக்கொண்ட வடிவேலு, அதிகாரி கொடுத்த ரசீதைக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்று நான் வெட்டிய, பெரிய, வட்டக் கிணற்றைக் காணோம் என்று முறைப்பாடு செய்வார்.



கொடுத்த காசுக்கு கிணறு வெட்டப்பட்டதாக அதிகாரிகள் அத்தாட்சிப்படுத்த களத்தில் கிணற்றையே காணாத இந்த நகைச்சுவை படத்தில் பார்த்து ரசிக்கத் தக்கதாக இருந்தாலும், மன்னாரில் இது போன்றே ஒரு வலைத் தொழிற்சாலைக்கு காசு கொடுத்து, அது இருப்பதாக அதிகாரிகள் அத்தாட்சிப்படுத்தினாலும் அப்படியொரு தொழிற்சாலையே இல்லை என்று கேட்கும்போது ரசிக்க முடியவில்லை. கோபம் தான் ஏற்படுகின்றது.

2019 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி அமைச்சின் ஊடாக வடக்கு கூட்டுறவுத் துறையின் கீழ் ரெக் சிலோன் நிறுவனத்தின் ஆலோசணையில் சிறுகைத் தொழிற்சாலைகள் உருவாக்க நிதி உதவி வழங்கப்பட்டது. 500 மில்லியன் ரூபாய் இதற்கென ஒதுக்கப்பட்டது. வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. மன்னாரிலும் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

அதில் ஒரு திட்டத்திற்கு வலைத் தொழிற்சாலை தொடங்கவென நிதி ஒதுக்கப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டதற்கு, அப்படியொரு தொழிற்சாலை இயங்குவதாகவும், கடந்த சில மாதங்களாக அது மூடப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் பதில் தந்திருக்கிறார்கள். ஆனால், விசாரித்துப் பார்த்ததில் "அப்படியொரு மீன் கடல்லயே இல்லையாம்" என்ற கதையாக வலைத் தொழிற்சாலையே மன்னாரில் இல்லை என்கிறார்கள்.

மீள்குடியேயற்ற புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி அமைச்சினால் மன்னார் மாவட்டத்திற்குக் கிடைத்த திட்டங்கள் எவை? அவற்றுக்கான செலவுகள் எவ்வளவு? திட்டத்தின் செயற்படு நிலை என்ன? என தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அதிகாரிகளிடம் எழுத்தில் விண்ணப்பிக்கப் பட்டது.

அதற்காகத் தரப்பட்ட உத்தியோகபூர்வப் பதிலில், மன்னார் மாவட்டத்திற்கு 4 திட்டங்கள் கிடைத்தன எனவும் நான்கினதும் மொத்தப் பெறுமதி 100 மில்லியன் 570 ஆயிரம் ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு திட்டங்களில் ஒன்றே வலை உற்பத்தி நிலையம். அதனை அமைப்பதற்கான செலவு 48 மில்லியன் ரூபாய். இந்த வலைஉற்பத்தி நிலையத்தின் மூலம் 37 மீனவ சங்கங்களின் அங்கத்தவர்கள் நேரடியாக நன்மை அடைகின்றனர். இப்படி மிகத் தெளிவாக அதிகாரிகளால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் 5 மாவட்டத்திலும் மாவட்டச் செயலகங்கள் ஊடாகச் செயற்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தில் மன்னாரிற்குக் கிடைத்த ஏனைய திட்டங்கள் இயங்குவதாக மன்னார் மாவட்டச் செயலகம் பதிலளித்தபோதும் அவற்றில் எந்தவொரு தொழிற்சாலையும் இயங்கவில்லை என்று கூட்டுறவுத் திணைக்களம் தெரிவிக்கின்றது. ஏனெனில் இந்தத் திட்டங்களின் செயற்படுத்துகைப் (இம்பிமென்டரி) பங்காளி கூட்டுறவுத் திணைக்கமே.

மன்னார் மாவட்டச் செயலகம் தந்த பதிலிலோ இந்த வலை உற்பத்தி நிலையத்தில் மட்டுமே தற்காலிகமாக பணிகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படி அதன் உற்பத்தி ஏன் இடை நிறுத்தப்பட்டது என்று அறிவதற்காக அந்த வலை உற்பத்தி நிலையம் எங்கே அமைந்துள்ளது என்று தேடினால், பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

இந்த வலை உற்பத்தி நிலையத்தை மன்னாரில் எந்தக் கூட்டுறவுச் சங்கம் மேற்பார்வை செய்கின்றது என மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர்கள் பதில் தெரியாது விழிக்கிறார்கள். மட்டுமன்றி இவ்வாறானதொரு வலை உற்பத்தி நிலையம் மாவட்டத்தின் எப்பாகத்திலும் தொடங்கப்பட்டதாகத் தகவல் எமக்கு எந்தக் காலத்திலும் விவரம் சமர்ப்பிக்கப்படவில்லை என்கின்றனர்.

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரகளின் பதில் தொடர்பில் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரகளிடம் தொடர்புகொண்டபோது, அவர்களும் இப்படியொரு திட்டம் மன்னாரில் இருப்பதனை உறுதி செய்ய முடியவில்லை என்கின்றனர்.

அவ்வாறானால் மாவட் டச் செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்ட இந்த வலை உற்பத்தி நிலையம் எங்கே? இனிமேல் ஆவணங்களைக் கிளறி, இல்லாது பொல்லாதுகளை எல்லாம் சொல்லி எதையாவது சமாளிக்க முயற்சிப்பார்கள் செயலக அதிகாரிகள் என்பது தெரிந்ததுதான். ஆனால், இந்த விடயத்தில் ஏதாவது நிதி மோசடிகள் இடம்பெற்றனவா என்பது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது வடக்கு ஆளுநரின் கடமை.

இறுதியில் வடிவேலின் நகைச்சுவை பாணியில் கிணறு வெட்டிய ரசீது உண்டு ஆனால் கிணற்றை காணவில்லை என்னும் நிலையை உருவாக்கி விட்டது மன்னார் மாவட்டச் செயலகம்.



# அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலிய கூட்டணி குறித்து ரணில் விமர்சனம்



இலங்கைஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க ஆஸ்திரேலியா அமெரிக்க பிரிட்டன் ஆகிய நாடுகளிடையேயான அவுகஸ் உடன்படிக்கையை இராணுவக் கூட்டணி என வர்ணித்துள்ளதுடன் அது தேவையற்றது இதனால் எதிர்விளைவுகள் ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இது மூலோபாய தவறு அவர்கள் தவறிழைத்துள்ளனர் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அந்த கூட்டணி ஒரேயொரு நாட்டை மாத்திரம் இலக்காகக் கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# விண்ணப்பிக்கலாம்

மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வுக்குட்படும் நிறுவனமொன்றின் பிரதான கணக்கீட்டு அலுவரால் செய்யப்பட்ட ஒரு தீர்மானம் மூலம் இன்னலுறும் எவரேனும் அத்தகைய தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்யக்கூடிய குழு 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படவுள்ள மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவாகும்.

அதற்கமைய கணக்காய்வு, சட்டம் மற்றும் அரசாங்க நிதி முகாமைத்துவம், பொது நிர்வாகம் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளில் அனுபவமுடையவர்களுக்கு இதற்கு விண்ணப்பிக்க முடியும். தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.

அதற்கமைய இதற்கான விண்ணப்பங்கள் நாடாளுமன்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023 ஒக்ரோபர் 09 அன்று அல்லது அதற்கு முன்னர் அரசமைப்புப் பேரவையின் செயலாளர்நாயகம் இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலாயின் அதன் விடயமாக, 'அரசமைப்புப் பேரவை: மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழு' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (05)


# நீதிவானின் இல்லத்துக்கு பாதுகாப்பு வழங்கிய கான்ஸ்டபிள்மீது தாக்குதல்

## பம்பலப்பிட்டியில் சம்பவம்

பம்பலப்பிட்டி பொன்சேகா வீதியில் உள்ள நீதிவான் ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குப் பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் கான்ஸ்டபிளை ஒருவர் தாக்கியுள்ளார் என பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த காருக்கு அருகில் காணப்பட்ட மோட்டார் சைக்கிளிலிருந்து பேசும் சத்தம் வருவதனைக் கேட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் அந்த இடத்துக்கு சென்றபோது அவர்கள் தப்பியோட முயற்சித்த நிலையில் அவர்களில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிளைக் கூரிய ஆயுதத்தால் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் கான்ஸ்டபிளின் வலது கை வெட்டப்பட்டதாகவும்,சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்எனவும்பொலிஸார் தெரிவித்தனர். (05)



# இலங்கைக்குத் தருவிக்கப்படவுள்ள மஞ்சள் காமாலைக்கான தடுப்பூசி

மஞ்சள்காமாலைநோய்க்கான 2 ஆயிரம் தடுப்பூசிகள் இந்த வாரம் இலங்கைக்கு தருவிக்கப்படவுள்ளன என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். மஞ்சள் காமாலை தடுப்பூசி களானவை ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்புநிதியம்(யுனிசெவ்)மூலம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இலங்கைக்கு சுமார்6ஆயிரம் மஞ்சள் காமாலை தடுப்பூசிகள் தேவைப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்கா நாடுகளுக்குச் செல்லும் அனைத்து இலங்கை பிரஜைகளும் இந்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அந்நாடுகளுக்குச் செல்வதற்காகக் காத்திருக்கும் 5 ஆயிரம் இலங்கையர்கள் இந்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்காக தற்போதும் காத்திருப்பதாக சுகா தாரத் துறைத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (05)

# கஜேந்திரன், பிரேமரத்ன இருவரின் சம்பவங்களையும் சமமாக நோக்குக

## டிரன் அலஸிடம் மனோ வலியுறுத்து

நாடாளுமன்றஉறுப்பினர்கஜேந்திரன் மீது திருகோணமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர் உதிக பிரேமரத்ன மீதான அனுராதபுர துப்பாக்கி சூட்டு சம்பவத்தையும் ஒரே மாதிரியான சட்டம், ஒழுங்குபிரச்சினையாகக்கருதி,விசாரித்து, குற்றவாளிகளைக் கைது செய்யுங்கள் என சட்டம், ஒழுங்கு துறை அமைச்சர் டிரன் அலஸிடம் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறே தான் செய்வதாக அமைச்சர் தன்னிடம் உறுதியளித்தார் என மனோ தெரிவித்தார். இதுபற்றி தற்சமயம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் தொலைபேசியில் தொடர்புகொண்டு அறிவித்ததாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டைக் கட்டியெழுப்ப ரணில் முன்னெடுக்கும் திட்டத்துக்கு உலக வங்கி முழுமையான ஆதரவு

## அதன் தலைவர் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் தலைமையிலான பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பு வேலைத் திட்டங் களை வெகுவாகப் பாராட்டிய உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா இலங்கையின் புத் தாக்க பாதைக்கான பிரவேசம் ம கிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள இந்தச் செயற்திட்டங்களை வெற்றிகர மாக முன்னெடுத்துச் சென்றால் இலங்கை எதிர்பார்க்கும் இலக்கு களை விரைவாக அடைய முடியு மென நம்பிக்கை தெரிவித்துள்ள உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா, அந்த முயற்சிகளுக்கு உலக வங்கியின் முழுமையான ஒத்துழைப்பு கிட்டும் என்றும் உறுதி யளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுக்கும் இடையில் திங் கட்கிழமை நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை யகத்தில் இடம்பெற்றது. இந்த விசேட சந்திப்பின் போதே உலக வங்கித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை எதிர்கொண்ட கடுமை யான பொருளாதார நெருக்கடியி லிருந்து மீள்வதற்கு உலக வங்கி வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உலக வங்கியின் தலைவருக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கை முழுமையான பொருளாதார மறுசீரமைப்புப் பாதையில் பிரவேசித்துள்ளதாக சுட்டிக்காட்டிய ரணில் விக்ரம சிங்க, இலங்கையின் கடன் நீடிப்பு வேலைத்திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அடுத்த தசாப்தத்தில் அதிக பொருளாதார வளர்ச்சி விகிதத்துடன் நாடு முழுமையாக இயல்புநிலைக்கு திரும்ப எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்காக சர்வதேச நாணய நிதி யத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறு சீரமைப்புகளை முழுமையாக அமுல் படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளா தார நெருக்கடி இலங்கைக்கு அபிவிருத்திக்கு பொன்னான கதவுகளை திறந்துள்ளது என



தான் நம்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க சுற்றுலா, தொழில் மற்றும் உணவுப் பாதுகாப்பு, விவசாய நவீனமயமாக்கல் துறை களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்டக் கம்பனிக ளுடன் இணைந்து பாரம் பரிய ஏற்றுமதி பயிர்க ளுடன் இலங்கையின் விவசாயத்துறையின் நவீனமயமாக்கல் செயல் முறையை ஆரம்பிப்பதற் கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வும் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க தெரிவித்தார்.



இந்திய-இலங்கை தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பலனாக, 4 புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவும் அதற்கு மேலதிகம ாக காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவதற்கும் அவசியமான பணி கள் முன்னெடுக்கப்பட்டு வரு வதாகவும், உத்தேச காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச பல் கலைக்கழகத்தை நிறுவதற்கு உலக வங்கியின் தொழில் நுட்ப உதவிகயை எதிர்பார்த்தி ருப்பதாகவும் ஜனாதிபதி தெரி வித்தார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையினூடாக இலங்கையின் அபிவிருத்தியை ஏற்படுத்த எதி ர்பார்ப்பதாகவும் வட மாகாணம் துரித மாக அபிவிருத்தி அடைந்துவரும் நிலை யில், காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலமான மின் உற்பத்தி என்பவற்றை ஊக்குவித்து வருவ தாகவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, பசுமை ஹைட்ரஜன் மற் றும் அமோனியா வைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்திசெய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாலின சமத்துவம், பெண்க ளுக்கு எதிரான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தல், மகளிர் ஆணைக்குழு உருவாக்கம் மற் றும் பெண்கள் ஆய்வுக்கான நிறுவனத்தை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்களுக்காக 4 புதிய சட்ட- மூலங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்க உள்ளதாகவும் ஜனாதிபதி அறிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடுத்த அழைப்பை உலக வங்கியின் தலைவர் ஏற்றுக்கொண்டார்.

தேவையான ஆலோசனை சேவைகளுக்காகவும் தொழில்நுட்ப உதவிகளுக்கும் அவசியமான நேரங்களில் தம்மை அல்லது சர்வதேச நடவடிக்கைகளுக்கான தலைவரைத் தொடர்பு கொள்ளு மாறு அறிவித்த உலக வங்கியின் தலைவர், ஒக்ரோபர் மாத இறுதியில் சர்வதேச நடவடிக்கைகளுக்கான தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறைக்கு முன்னுரிம அளித்து பொருளாதார மறுசீரமைப்புக்காக மே ற்கொண்டுள்ள அணுகுமுறை சாத கமானது என சுட் டிக்காட்டிய உலக வங்கியின் தலைவர், தற்போதைய நிலை மையில் இலங்கைக்கு அதுவே மிகவும் பொருத்தமானது என்றும் தெரிவித்தார்.

உலக கப்பல் பாதையின் மத்தி யஸ்தானமாக விளங் கும் இலங்கையின் புவியியல் அமை விடம் தனித்துவ ம ானது. அதனால் பொருளாதார அனுகூலங்களைப் பெறுவதற்கு துறைமுக வர்த்தகம் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளையும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என உலக வங்கியின் தலைவர் சுட்டிக்காட்டினார். இலங்கையின் டிஜிற்றல் மய மாக்கல், காற்றாலை சூரிய சக்தி மற்றும் கல்வித்துறை உட்பட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறைக்கு உலக வங்கி ஆதரவளிக்கும் என் றும் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளில் தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற வலயத்தை இணைக்கும் உள் ளக வலுசக்தி கட்டமைப்பில் இணைந்துகொள்ள உலக வங்கி விருப்பத்துடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அமைச்சுகள் மற் றும் அரச நிறுவனங்களை டிஜிற்றல் மயமாக்கும் வேலைத் திட்டங்கள் வெளிப்படைத்தன்மை மிக்கதாக திறம்பட முன்னெடுக்க வேண்டுமென உலக வங்கியின் தலைவர் தெரிவித்ததோடு, அந்த மாற்றங்களைச் செய்யும் போது, ஆசிரியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் தடையேற்படுத்த முற்படாலாம் என்றும் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க, மாண வர்களின் எதிர்காலமே தனக்கு முக்கியம் என்றும் வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை ஊக்குவிப்பதே தனது நோக்கம் எனவும் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச் சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மொஹான் சமரநாயக்க உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (05)

# தியாக தீபம் திலீபனை நினைவு கூரும் நிகழ்வு 5 ஆம் நாளாக முன்னெடுப்பு!

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவு தினம் அண்மையில் அனுஷ் டிக்கப்பட்ட நிலையில், அவரை நினைவுகூரும் நிகழ்வு ஐந்தாம் நாளாக நேற்று (செவ்வாய்க்கிழமை) திருகோணமலையில் இடம் பெற்றது.

திருகோணமலை சிவன் கோவிலடியில் முன் னெடுக்கப்பட்ட குறித்த நினைவுகூரல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் மற் றும் திருகோணமலை வாழ் மக்கள் ஒன்றிணைந்து சுடர் ஏற்றி தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு மரியாதை செலுத்தினர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த செல்வராசா கஜேந் திரன் -

நினைவேந்தல் உரிமை என்பது அனைத்து மக்களுக்கும் உரித்தான ஒன்று. அதனை மறுத்து அண்மையில் எம்மீது மூர்க்கத்தனமாக மேற்கொள்ளப்பட்ட இன வெறித்தாக்குதல் சமூகங்களுக்கு இடையில் இன விரிசலை ஏற்படுத்த இந்த அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒன்று.



அரச இராணுவ ஒத்து ழைப்புடன் புலனாய்வுத் துறையினராலே மேற்கொள் ளப்பட்ட தாக்குதலாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

தமிழ், முஸ்லிம்களது உரிமைக்காகவே தியாகி தி லிபன் அஹிம்சை முறையில் போராடினார். அது பிற்போக்கில் அரசால் பிரிவினை வாத மாக மாற்றப்பட்ட நிலையில் தற்போதும் இந்த அரசு குறித்த பிரிவினை வாத அடக்குமுறைக்கு ஏற்றவாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (05)



# கரடி தாக்கியதில் ஒருவர் படுகாயம்

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவுகுட்பட்ட கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பிரதேசத்தில் கரடி தாக்கியதில் ஆண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் சம்பவம் தொடர்பாக தெரிய- வருவது யாதெனில் -

திங்கட்கிழமை காலை 10 மணியளவில் விறகு எடுப்பதற்காக காட்டுக்குள் சென்ற வேளை கரடி தாக்கியுள்ளதுடன் முகம், கண்கள், கைகள் போன்றவற்றில் பாரிய காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கரடி தாக்கியவர் உடனடியாக திருக்கோவில் ஆதார வைத்தி யசாலைக்கு கொண்டு சென்று அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாறை போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு கரடி தாக்குதலுக்கு உள்ளானவர் திருக்கோவில் 04 காயத்திரி கிராமத்தைச் சேர்ந்த 40 வயதுடைய வடிவேல் தனராஜ் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவ் விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# ஹரக்கட்டா தப்பிக்கும் முயற்சிக்கு உதவிய கான்ஸ்டபிளின் தாயும் உறவினரும் கைது

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 'ஹரக்கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன தப்பிச் செல்ல முயற்சித்தமைக்கு உதவினார் என சந்தேகிக்கப்படும் பொலிஸ் கான்ஸ்ட பிளின் தாயும் உறவினர் ஒருவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஹரக்கட்டா தப்பிச் செல்லும் முயற்சிக்கு உதவியதாக கூறப்படும் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அறிவிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்பில் இருக்கும்போது சந்தேக நபரான ஹரக்கட்டா, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரி ஒரு வரின் துப்பாக்கியை அபகரிக்க முயற்சித் துள்ளார்.

இதன்போது, ஏற்பட்ட மோதலில் காயம டைந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# பாடசாலை மைதானத்தை தனியார் அபகரிக்க முயற்சி கிண்ணியாவில் மாணவர்கள், பெற்றோர் ஆர்ப்பாட்டம்





கிண்ணியா வலயத்திற்குற்பட்ட காக்காமுனை கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள அப்துல் ஹமீதுவித்தியாலயபாடசாலையின் மைதானத்தை தனியார் ஒருவர் அபகரிக்கும் நோக்கில் சுற்று வேலி இட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த காணியை பாடசாலை மைதானமாக கடந்த 20 வருட காலமாக பயன்படுத்தி வந்த நிலையில் தனியார் ஒருவர் அம் மைதானம் அவரது காணி என உரிமை கோரியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய-வருவதாவது -

தற்போது பாடசாலை அமைந்துள்ள காணி, அப்துப் ஹமீது என்பவரால் பாடசாலைக்கு என அன்பளிப்புச் செய்யப்பட்டதாகவும், 20 வருடங்களின் பின்னர் தற்போது அவரது மகன் ஒருவரே இவ்வாறு அன்பளிப்புச்செய்யப்பட்ட காணியில் மைதானம் தனக்குரிய காணி என உரிமை கோரி அதற்கான சுற்று வேலியையும் இட்டிருந்தார்.

இது தொடர்பில் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்திய பொதுமக்கள், அந்தக் காணி அரச காணியாகவே இருந்ததாகவும், பின்னர் பாடசாலைக்கு மைதானம் ஒன்று தேவை என்ற வகையில் பற்றைக்காடாக இருந்த அவ்விடத்தினை பொதுமக்கள் துப்புரவு செய்து 20 வருடகாலமாக மைதானமாக பயன்படுத்தி வருகின்றமை தொடர்பில் அறியப்படுத்தியிருந்தனர்.

அதன் பின்னர் அந்தக் காணியை அரச காணி என பிரதேச செயலாளரால் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி அடையாளப்படுத்தப்பட்டது.

அரசகாணியைமைதானத்திற்கே பெற்றுத்தரக் கோரியும், அரசியலை காணி அபகரிப்புச் செய்பவருக்கு சார்பாகபயன்படுத்துவதற்குஎதிராகம் பொதுமக்களும் மாணவர்களும் சேர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் 'அரச காணி அபகரிப்பை தடுத்து நிறுத்து, பிரதேச செயலாளரே அரச காணியை எமது மைதானத்துக்கே பெற்றுத்தா?, கான்ஸ் அரசியலை உள்ளே புகுத்தாதே, எங்களின் விளையாட்டு நிலம் எங்களின் விளையாட்டுக்கான வளம்' போன்ற பதாதைகளை ஏந்தி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் பாடசாலையிலிருந்து காக்காமுனை பிரதான வீதி சந்தி வரை நடைபவனியாகச் சென்று, பொதுமக்களால் தடைகள் போடப்பட்டு இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், போக்குவரத்துக்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் வேண்டுகோளிற்கு அமைய பிரதேச செயலாளர், கோட்டக்கல்வி அதிகாரியும் வருகை தந்து பிரச்சினைக்கான தீர்வாக மைதானத்தை அபகரிப்புச் செய்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மாணவர்களை பாடசாலைக்கு அழைத்தும் செல்லுமாறும் குறிப்பிட்டு ஆர்ப்பாட்டத்தை முடிவுறுத்தி வைத்தனர். (05)

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

# அமெரிக்க – இலங்கை வர்த்தகம், முதலீடு ஒப்பந்த கவுன்சில் கூட்டம் கொழும்பில்






அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான 14 ஆவது கவுன்சில் கூட்டம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இலங்கை அரசின் சார்பில் சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் பிரதமபேச்சாளர்கே.ஜே.வீரசிங்கவும் அமெரிக்கத் தரப்பில் இருந்து தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்கவின் ஐ.நாவுக்கான பதில் உதவி வர்த்தகப் பிரதிநிதியான பிரெண்டன் லிஞ்ச் ஆகியோர் இந்த தொழில்நுட்ப மட்டக் கூட்டத்துக்கு இணைத் தலைமை தாங்கினர்.

வர்த்தகம், முதலீடு, சுங்கம், தொழிலாளர் உறவுகள், புலமைச் சொத்து, விவசாயம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவன அதிகாரிகள் இந்தப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் ஜனாதிபதியின் பதில் செயலாளர் சாந்தனி விஜேவர்தன ஆகியோர் சந்திப்பின் ஆரம்பநிகழ்வில் கருத்துத் தெரிவித்தனர்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான கவுன்சில் கூட்டத்தில் , முதலீட்டு சூழலை பாதிக்கும் கொள்கைகள், அண்மைய தொழிலாளர் சட்ட மறுசீரமைப்புகள், புலமைச் சொத்து பாதுகாப்பு மற்றும் அமுல்படுத்தல், சுங்கம் மற்றும் வர்த்தக வசதி அளித்தல், வர்த்தகத்தைப் பாதிக்கும் தொழில்நுட்ப தடைகள், ஆடைகள், இரத்தினங்கள் மற்றும் நகைகள் அதே போன்று விவசாயத்துக்கான சந்தைப் பிரவேசம் உட்பட இரு நாடுகளும் பரந்த அளவிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான விவகாரங்களில் கவனம் செலுத்தின.

டிஜிற்றல் பொருளாதாரம், இரத்தினங்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில், மலர் வளர்ப்பு, படகு கட்டும் துறைகள் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சி வணிகமயமாக்கல் தொடர்பான ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவி குறித்தும் ஆராயப்பட்டது.

இலங்கையில் நேரடி வெளிநாட்டு முதலீட்டை அங்கீகரிப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவது மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் வலுவான மற்றும் வெளிப்படையான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது உள்ளூர் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் என்பதை அமெரிக்காவும் இலங்கையும் அங்கீகரித்துள்ளன.

நல்லாட்சியில் கவனம் செலுத்தி, இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும் வலுவான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை இதன் போது அமெரிக்கா வலியுறுத்தியது.

அண்மையில் முன்மொழியப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டம் பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்களை இலங்கை முன்வைத்ததோடு லஞ்சம் மற்றும் அனைத்து வகையான ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்க அரசாங்கத்தின் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சியைக் கோரியது.

பைடன் – ஹாரிஸ் நிர்வாகத்தில் தொழிலாளர்களின் உரிமைகளை ஆதரிப்பதற்காக வர்த்தக பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அமெரிக்கா, இலங்கைக்கு உறுதியளித்துள்ளது.

தொழிலாளர் சட்டங்களைத் திருத்தியமைக்கும் செயல்முறை மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் தரங்களுக்கு இணங்கிச் செயற்படுவதில் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் இலங்கை விளக்கமளித்தது.

தொழிலாளர் சட்டங்களை உருவாக்கும் போது அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்தாலோசிக்க வேண்டியதன் அவசியத்தையும் பொது மக்கள் கருத்தறிவதற்கான நியாயமான காலப்பகுதியொன்றை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அமெரிக்கா வலியுறுத்தியது.

இதுதொடர்பில் கருத்துதெரிவித்த இலங்கைப் பிரதிநிதிகள், தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் போது பின்பற்றப்படும் நடைமுறைகள் குறித்தும் விளக்கமளித்தனர். இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிலாளர் சட்டத் திருத்தங்களை அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தும் போது, அதற்குத் தேவையான ஆதரவை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அமெரிக்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விவசாயப் பொருள்களுக்கான வர்த்தகத் தடைகளைக் மட்டுப் படுத்துவதை அமெரிக்கா ஊக்குவித்தது. இலங்கையின் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்காக, கால்நடைத் தீவனம் உட்பட பல்வேறு விவசாய பொருட்கள் ஏற்றுமதிக்கான அதிக சந்தை வாய்ப்பை பெற்றுத்தருவதாக அமெரிக்கா கருத்து வெளியிட்டது.

நிலையானவிவசாயஅபிவிருத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் உயிரியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்தும் அமெரிக்க மற்றும் இலங்கைப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

இயற்கை மசாலாப் பொருள்கள் மற்றும் செறிவூட்டும் உயர் பெறுமதியுடைய மற்றும் பெறுமதி சேர் விவசாய உற்பத்திகளுக்கான சந்தைப் பிரவேசம் தொடர்பிலும் இலங்கை ஏற்றுமதியாளர்கள் மற்றும் அமெரிக்க நுகர்வோருக்கு நன்மை பயக்கும் வகையில் ஆடைகள், ஆபரணங்கள் மற்றும் தோல் சார் உற்பத்திகளுக்கான தீர்வை வரிச்சலுகைகளை நீடித்தல் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகள் கவனம் செலுத்தியிருந்தனர்.

இருதரப்பு வர்த்தகம் மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்கான வழிமுறையாக புலமைச் சொத்து பாதுகாப்பு மற்றும் அதனை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இரு நாடுகளும் உறுதிப்படுத்தின.

இலங்கையின் புலமைச் சொத்துச் சட்டத்தின் திருத்தம் மற்றும் அதற்கமைவான ஏனைய சட்டங்கள் தொடர்பிலான நடைமுறை அம்சங்கள் குறித்தும் கருத்து வெளியிடப்பட்டது. புலமைச்சொத்துச் சட்ட திருத்தங்கள் தொடர்பாக இலங்கையுடன் இணைந்துச் செயற்படுவதை அமெரிக்கா ஏற்றுக்கொண்டதோடு, அதன் திறன் மேம்பாட்டிற்கு பங்களிப்பு வழங்கவும் இணக்கம் தெரிவித்தது.

2024 இல் நடைபெறவிருக்கும் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு கூட்டத்திற்கு முன்னதாக வர்த்தக விவகாரங்களில் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்த இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்தன. துறைசார் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

## பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்த பங்களாதேஷ் சபாநாயகர்



பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் பங்களாதேஷ் சபாநாயகர்ஷிரின்ர்மின் சவுத்ரி ஆகியோருக்கு இடையில்சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது என பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பில் இருநாட்டு நாடாளுமன்றங்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் மேம்படுத்துவதற்காக நாடாளுமன்ற செயற்பாடுகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வது தொடர்பில், புதிய வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவது குறித்து பிரதமரால் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும்இவ்வாறானஒத்துழைப்பின் மூலம் இருநாடுகளினதும் ஜனநாயக நாடாளுமன்ற செயற்பாடுகளை வலுப்படுத்த முடியும் எனவும் பங்களாதேஷ் சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (05)

## கல்முனை சமாதான பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பும்

கல்முனையில் சுமார் 31 வருடங்களாக இயங்கி வருகின்ற சமாதான பாலர் பாடசாலையால் சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சி ஒன்று சமாதான பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எம்.எச்.ஹிஜ்ரா தலைமையில் கமு/கமு/அல்-பஹ்றியாதேசியபாடசாலை மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் கலந்துகொண்டார். மேலும் அதிதிகளாக கல்முனை கமு/கமு/ அல்-பஹ்றியாதேசியபாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசல், பிரதி அதிபர் ஈ. றினோஸ் ஹஜ்மீர், விளையாட்டு ஆசிரியர் எம்.எம்.றியால், அல்-பஹ்றியா பழைய மாணவிகள் அமைப்பின் செயலாளரும் ஆசிரியையுமான எம்.எம்.நஜீனா லாபீர், நைட்டா போதனாசிரியர் பொறுப்பாளர் எம்றீ. அஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு முதலாம், இரண்டாம்மற்றும்மூன்றாம் இடங்களைப் பெற்ற சிறார்களுக்கு பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

மேலும் ரஹ்மத் பவுண்டேன் மூலம் போட்டியில் கலந்துகொண்ட அனைத்துச் சிறார்களுக்குமான பாடசாலை உபகரணங்கள் ரஹ்மத் பவுண்டேன் ஸ்தாபகர் ரஹ்மத் மன்சூரால் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறுவர்களின் பெற்றோர்கள், ஊர்மக்கள், நலன்விரும்பிகள் என பலர் கலந்துகொண்டனர்.

(05)


தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
உலக சுற்றுலா தினம்
2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
Chrysalis
Catalyzing change
ஊடாக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர்
Kalaikkathir

# கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பெரும்பான்மைத் தலைவர்களே பிண்ணனி

## இராதாகிருஷ்ணன் எம்.பி. சாடல்



நாட்டில் அமைதி நிலவ வேண்டுமானால் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, இனங்களுக்கு இடையில்; ஒற்றுமை நிலவ வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் கண்டனம் வெளியிட்டு;ளார்.

தமிழ் சிங்கள மக்களிடையே இனக் கலவரத்தை உருவாக்கி அதன் மூலம் தேர்தலில் வெற்றியைப் பெறும் நோக்கத்தை கொண்ட பெரும்பான்மைத் தலைவர்களின் பிண்ணனியிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில், நாட்டில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டால் மாத்திரமே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்னண் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் வாகனம் கோர விபத்து

## தாத்தாவும் பேர்த்தியும் சாவு



மட்டக்களப்பில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் வைத்து திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பகுதியில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் நோக்கிச் சென்றவர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து நாட்டுக்கு வருகைதரும் குடும்ப உறுப்பினர்களை அழைத்துவரச் சென்றவர்களே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர்.

இவர்கள், வான் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது வான் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரம் ஒன்றில் மோதியதில் இருவரும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதில், காத்தான்குடியைச் சேர்ந்த 54 வயதுடைய முகம்மட் இப்றாகிம் முகம்மட் ஹுசைன் என்பவரும் அவரது 4 வயது பேரப்பிள்ளையான முகம்மட் நுபைல்ஹிபாசெரீன் என்பவரும் மரணமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில், மரணமடைந்த நபரின் மனைவி பலத்த காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மட்டக்களப்பு கிரான்குளத்தில் கசிப்புடன் இரண்டு பேர் கைது!



மட்டக்களப்பு கிரான்குளத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவீடுகளை முற்றுகையிட்ட பொலிஸார் மறைத்து வைக்கப்பட்டிருந்த 120 லீற்றர் கோடாவையும் கைப்பற்றியுள்ளனர். (05)

# வத்தளை, பள்ளியாவத்தை கடற்கரையில் இனந்தெரியாத ஆணின் சடலம் ஒதுங்கியது

வத்தளை, பள்ளியாவத்தை கடற்கரையில் இனந்தெரியாத நபரொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சடலம் ஒன்று கடற்கரையில் காணப்படுவதாக திங்கட்;கிழமை மாலை கிடைத்த தகவலின் அடிப்படையில் வத்தளை பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இறந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. உயிரிழந்தவர் 65 முதல் 70 வயதுக்கு உட்பட்ட, 5 அடி 5 அங்குல உயரமும், மெலிதான உடலைக் கொண்டவர் என பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஆன்மீகம் சார்ந்த விடயங்களில் அரசியல் செய்ய முற்படக்கூடாது

## நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன் தெரிவிப்பு



ஆன்மீகம் சார்ந்த விடயங்களில் அரசியல் செய்வதற்கு முற்படக்கூடாது. அரசியல் என்பது மக்களுக்கான சேவை. அந்தசேவையை முறையாக வழங்க அரசியல்வாதிகள் ஒன்றுபட வேண்டும். - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைவாக நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பொகவந்தலாவ லெட்சுமி தோட்ட மத்திய பிரிவு, கெம்பியன் மேற்பிரிவு மற்றும் கெம்பியன் 57 ஆகிய பிரதேசங்களில் உள்ள ஆலயங்களுக்கான காசோலைகள், ஒலி பெருக்கி, மின்பிறபாக்கி மற்றும் கலசங்கள் என்பன வழங்கும் நிகழ்வு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பகமுவ பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது, அந்த ஊரில் உள்ள இளைஞர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஊடாகவே நிதி ஒதுக்கீட்டை கையளிப்பதற்கு ரமேஷ்வரன் மேற்கொண்ட நடவடிக்கையை ஊர் மக்கள் பாராட்டினார்கள்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் - மலையக அரசியல் கலாசாரம் மாற வேண்டும் என்ற உயரிய பண்புடனேயே எமது பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் செயற்பட்டு வருகின்றார். அதற்காக பல விட்டுக்கொடுப்புகளை செய்கின்றார். இதனை எமது பலவீனமாகக் கருத வேண்டாம். மக்களுக்காகவே அதனையும் செய்கின்றோம். ஏனெனில் எமது மலையக இளைஞர்களும் இன்று மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்.

ஆன்மீக நிலையங்கள், பாடசாலைகள் போன்ற முக்கிய - சமூகத்தின் அங்கீகாரத்தை பெற்ற இடங்களில் ஒருபோதும் அரசியல் நடத்தக்கூடாது. அவ்வாறான இடங்களில் இணைந்து செயற்பட்டு சிறந்த முன்னுதாரணத்தை சமூகத்துக்கு - அடுத்த தலைமுறைக்கு வழங்குவதற்கு அரசியல் தரப்புகள் முன்வர வேண்டும். - என்றார். (05)

# வெளிநாட்டு சக்திகளும், உள்ளூர் சக்திகளும் சேர்ந்துசெய்த சூழ்ச்சிதான் ஈஸ்டர் தாக்குதல்

## ஹரீஸ் எம்.பி. சாட்டை

அண்மையில் வெளியான சனல் 04 காணொளி விடயம் பொய்யாக புனையப்பட்ட விடயமல்ல. அதில் அவிழ்க்கப்படாத இன்னும் பல மர்மங்கள் உள்ளன போன்றே தெரிகிறது. சக்திவாய்ந்த அந்நிய நாடுகளின் திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலுக்கு அமையவே இப்படியான சம்பவங்கள் இலங்கையில் அரங்கேறுகின்றன. இலங்கை முஸ்லிங்களைக் குறிவைத்து அதிகார கதிரையை நோக்கியதாக முன்னெடுக்கப்பட்ட பெரிய சக்திகளின் பந்தாடலுக்குள் இலங்கை முஸ்லிம் சமூகம் சிக்கிக்கொண்டுள்ளது. பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப்பின் கொலையுடனையே முஸ்லிம் சமூகத்தின் மீதான பந்தாடல்கள் ஆரம்பித்துள்ளன என நம்புகிறேன். என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

மருதமுனை மருதூர்கொத்தன் கலையரங்கில் நடைபெற்ற மருதமுனை பைத்துல் ஹெல்ப் போ ரிலீப் அமைப்பின் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

தெற்காசியாவின் பூகோள அரசியல் போட்டிக்காக இலங்கையின் நிலையை மோசமான சூழ்நிலைக்கு சில சக்திகள் கொண்டுசெல்கின்றன. அமெரிக்க ரஷ்ய பனிப்போரில் சில நாடுகள் சிக்கிக்கொண்டது போல சீன-அமெரிக்க பூகோள அரசியல் போட்டியில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு கேந்திர நிலையமான இலங்கை மாட்டிக்கொண்டுள்ளது. இலங்கையில் யார் ஜனாதிபதி, பிரதமர், அரசாங்கம் அமைக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது மேற்கத்தைய சக்திகளாகவே இருக்கிறது. அவர்கள் தமது சுயநலனுக்காக சுயாதீனமாக எமது நாட்டைக் கொண்டுசெல்ல விட மாட்டார்கள். அவர்கள் சரியாகத் திட்டமிட்டு நாட்டை சீரழிக்க காய் நகர்த்துவார்கள்.

குறிப்பாக சணல் 4 இல் வெளியான காணொளியில் ஆசாத் மௌலானா கூறிய விடயங்களை இலேசில் தட்டிக்கழிக்க முடியாது. அதில் பல உண்மைகள் இருக்கின்றன. முஸ்லிம்களை பலிக்கடாவாக்கி முஸ்லிம்கள் மீது பழிசுமத்தி தங்களுடைய அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த வெளிநாட்டு சக்திகளும், உள்ளூர் சக்திகளும் சேர்ந்து செய்த மிகப்பெரிய சூழ்ச்சிதான் ஈஸ்டர் தாக்குதல். இதில் முஸ்லிம் சமூகம் பலிக்கடாவாக்கப்பட்டு கிறிஸ்தவ சமூகமும் மோசமாக பாதிக்கப்பட்டது. அது போன்றே தலைவர் அஷ்ரபின் மரணமும் பல மர்மங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது. அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடக்க வாய்ப்பிருப்பதால் பல்வேறு காய்கள் நகர்த்தப்படும். இலங்கையர்களான நாம் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும். அந்நிய சக்தி களின் பொறியில் மாட்டிக்கொண்ட இலங்கை போல வேடக்குகிழக்கில் அதிக முஸ்லிங்களை கொண்ட கேந்திர நிலையமான கல்முனையும் மாட்டிக்கொண்டுள்ளது. இவைகளையெல்லாம் பற்றி சிந்திக்காது கல்முனை நகரில் உள்ள சில மனநோயாளிகள் சம்பந்தமே இல்லாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள். கல்முனை மாநகரின் மகிமையைப் பாதுகாக்க மருதமுனையின் பங்களிப்பு அளப்பரியது. இந்த மனநோயாளிகளைப் பற்றிப் பேச இந்த இடம் போதாது. இவர்களைப் பற்றி பேச நிறைய பேச வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் அவர்களைப் பற்றி பேசலாம் என்று நினைக்கிறேன்.

தமிழ் பேராசியர்கள் தனது இனத்தின் வேட்கைக்காக மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு செய்து களப்பணி செய்வது போல முஸ்லிம் சமூகத்தில் முஸ்லிங்களை அரசியல் மயப்படுத்த பேராசியர் எம்.எம். பாஸீல் களத்தில் இருப்பதை காண்கிறேன். தனது மேற்கொண்ட ஆய்வுகளை கொண்டு சமூகத்தைப் பற்றி சிந்திக்கும் இலங்கை முஸ்லிங்களின் கல்வி ஆளுமை அவர். இப்படியானவர்களை முஸ்லிம் சமூகம் பயன்படுத்தி முஸ்லிங்களுக்கு எதிரான சவால்களை முறியடித்து தீய சக்திகளின் அஜந்தாக்களிலிருந்து முஸ்லிம் சமூகத்தை பாதுகாத்து நமது ஒற்றுமையை பலப்படுத்த இளைஞர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.நா. மீதுள்ள நம்பிக்கை தமிழர்களுக்கு குறைகிறது

## ரெலோ தலைவர் செல்வம் கூறுகிறார்



"ஐக்கிய நாடுகள் சபை மீதான நம்பிக்கை தமிழ் மக்களுக்கு குறைந்து வருகின்றது' என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார். மன்னாரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய நாடுகள் சபை வலுவான அல்லது ஆக்கபூர்வமான தீர்மானங்களைக்கொண்டு வந்து இலங்கை அரசாங்கத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு மனித உரிமை மீறல்களுடன் சம்பந்தப்படவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதும் எமது மக்களின் கோரிக்கையாகவும் ஆவலாகவும் உள்ளது. ஆனாலும் ஐ.நா. சபையிலே தீர்மானங்கள் வருகின்றபோதெல்லாம் இலங்கை அரசாங்கம் ஐ.நா. சபையை ஏமாற்றுகின்ற வகையிலே காலங்கள் கொடுக்கப்படாலும் அவற்றை நடை முறைப்படுத்தாது தொடர்ந்தும் கால நீடிப்பை பெறுவதற்கான உத்திகளைக் கையாண்டு வருகின்றது. அதற்கு ஏற்ற வகையில் ஐ.நா. சபையும் அவர்களுக்கு வாய்பை வழங்கி வருகின்றது. இதனால் தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது. - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# 75 துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 42 பேர் உயிரிழப்பு; 33 பேர் காயம்




நாடு முழுவதும் இந்த வருடம் ஆரம்பம் முதல் திங்கட்கிழமை வரையான காலப் பகுதிவரை 75 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் இதன்போது 42 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களில் காயமடைந்த 33 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் அவர் கூறினார். இந்த வருடத்தின் முதல் சில மாதங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார். (05)

# மாணவர்கள் காலை உணவு உண்ட பின்பே பாடசாலைக்குச் சமுகமளிக்க வேண்டும்

## பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அறிவுறுத்து









பாடசாலை மாணவர்கள் காலை உணவை கட்டாயமாக உட்கொண்டே பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக போசாக்கான உணவுகளையே உண்ணப் பழகிக்கொள்ள வேண்டும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற காலை ஆராதனை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இயற்கையானதும், போசாக்கானதுமான உணவுகளை விட்டுவிட்டு பொருத்த மற்ற உணவுகளையே நாம் உண்ணத்தொடங்கியுள்ளோம். இப்போது பெண்கள் வீடுகளில் சமைப்பதைக் குறைத்துக் கொண்டுவருகின்றனர். தொழில் செய்யக்கூடிய பெண்கள் அதனை சிரமம் என்று பார்க்கின்றனர். என்றாலும் ஒரு வீட்டின் ஆரம்பம் சமையல் அறைதான். குறிப்பாக பெண்கள் சமையலை ஓர் அடிமைத்தனமாக நினைக்கக்கூடாது. சமையல்தான் ஒரு வீட்டின் மிக முக்கியமான விடயமாகும்.

கல்வியைப் பொறுத்த வரையில் நமக்குத் தெரிந்த விடயத்தை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் எமது அறிவு விருத்தியடையும். எமக்குத் தெரிந்த விடயங்களை இரகசியமாக பேணிக்கொள்ளாது ஏனையவர்களுக்கும் சொல்லிக்கொடுக்க மாணவர்கள் பழகிக்கொள்ள வேண்டும். - என்றார்.

கல்வி பொதுத்தராதர உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவிகள், வலய மட்ட தமிழ் தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகள் மற்றும் கோட்ட மட்ட சிறுவர் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்று வலயமட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் என பலர் இந்நிகழ்வின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் எம்.சீ. என்.றிப்கா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான எஸ்.முபாரக், எம்.எப்.ஐ. மார்சூனா உள்ளிட்ட ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர். (05)

# வவுனியா பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி புறக்கணிப்பு குறித்து சாள்ஸ் எம்.பி ஆதங்கம்

## நாடாளுமன்றத்தில் நேற்று வெளிப்படுத்தினார்

வவுனியா பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது அவர் இதனைத் தெரிவித்தார். உயர் கல்வி அமைச்சரின் கவனத்திற்கும் இந்த விடயத்தை கொண்டு சென்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா பல்கலைக்கழகத்தில் வளப் பற்றாக்குறை அதிகமாக காணப்படுகின்றது.

அதனைத் தீர்த்து வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதேவேளை, வவுனியாப் பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை, வவுனியா மற்றும் வன்னி வாழ் மக்களுக்கு மனவேதனையான விடயம். சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும் மாத்திரமே வரவேற்பு பலகை இடம்பெற்றிருந்தது. இது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது.

இதனை உயர்கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். இதுபோல் இனிவரும் காலங்களில் நடைபெறாது பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த உயர்கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை தமிழ்மொழி புறக்கணிப்பு தொடர்பில் பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இவ்வாறு நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார். (100)

# சட்டத்தை கையில் எடுக்கும் காடையர்களை கைதுசெய்க

## ஐக்கிய மக்கள் சக்தியின் மூதூர் செயலர் அறிக்கை

(ஹஸ்பர்)

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தைக் கையிலெடுக்க காடையர்களுக்கு அனுமதி வழங்க முடியாது என கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினரும்

ஐக்கிய மக்கள் சக்தியின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளருமானஎம். எம். மஹ்தி தெரிவித்துள்ளார். அவர் ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சிறுபான்மை சமூகத்தின் மீது அரங்கேற்றப் பட்ட அநியாயங்கள் போன்றே தியாகி திலீபன் நினைவேந்தல் ஊர்திப் பவனி மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதும் இனவெறுப்பு தாக்குதல் நடந்தப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் அநியாயமாக உயிர்களையும் உடமைகளையும் இழந்த அனுபவங்கள் இருந்தும் மீண்டும் அதே இனவெறுப்பு நிகழ்ச்சி நிரலை அரசியல் சுய நலத்திற்காக மீண்டும் கையில் எடுக்கின்றார்கள்.

தியாகி திலீபன் நினைவேந்தல் ஊர்வலத்தை நிறுத்துவதாயின் நீதிமன்றக் கட்டளையினைப் பெற்றிருக்க வேண்டுமே தவிர காடையர்களைக் கொண்டு வழி மறித்து தாக்குதலை நடத்த அனுமதிக்க முடியாது.

இதேபோன்றுதான் கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்தின் மீதும் அவர்களின் உடமைகள் மீதும் பள்ளிகள் மீதும் எந்த ஒரு அடிப்படையும் இன்றி அரசியல் இலாபங்களுக்காக பெரும்பான்மை காடையர்களைக் கொண்டு தாக்குதல்களை நடத்தினார்கள்.

இவ்வாறான தாக்குதல்கள் குறித்து பல்வேறு முறைபாடுகள் செய்யப்பட்டிருந்தும் குற்றவாளிகளுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இனங்களிடையே ஜனநாயகத்தையும் மனித உரிமையையும் நிலை நாட்டுகிறோம் என ஐ.நா வரை கூச்சலிடும் ஆட்சியாளர்கள் சட்டத்தின் ஆட்சியிலிருந்து குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கு மாத்திரம் விலக்களிக்கப்பது மனித உரிமை மீறல்களாகும் - என்று அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீது தாக்குதல் நடாத்திய காடையர்களின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதோடு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மன்னாரில் இன்று நீர் விநியோகம் 'கட்'




(பேருவளை பி.எம். முக்தார்)

மன்னார் நீர் வழங்கல் விநியோகப் பாதையில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று மு.ப. 9 மணி முதல் பி.ப. 6 மணி வரையில் 9 நேர நீர் விநியோகத் தடை நடைமுறையில் இருக்கும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

முருங்கன் மற்றும் அண்டிய பகுதிகள், மன்னார் நகர் மற்றும் அண்டிய பகுதிகள், பள்ளிமுனை மற்றும் அண்டிய பகுதிகள், எழுத்தூர் மற்றும் அண்டிய பகுதிகள், தோட்டவெளி, சிறுத்தோப்பு, எருக்கலம்பிட்டி, வங்காலை மற்றும் அண்டிய பகுதிகள், அடம்பன் மற்றும் அண்டிய பகுதிகள், திருக்கேதீஸ்வரம் மற்றும் நாகதழ்வு ஆகிய பகுதிகளில் இந்த நீர் விநியோகத் தடை நடைமுறையில் இருக்கும்.

நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விவரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2023இல் வெளியிடப்பெற்றது.